Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 58/2023 PW-1**

Name : பூங்காவனம்
Father / Husband name : கோதண்டம்
Village : காட்டுச்சிவிறி
Age : 57
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.02.2026

A1 present. A2 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Counsel for accused present.

**<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் போலிசார் சொன்னதின்பேரில் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் இருட்டான நேரம் இரவு 08.45 மணி என்றால் சரிதான். இருட்டான நேரம் என்பதால் எதிரிகள் யார் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகளின் பெயர் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் எனது மகன் கொடுத்தார். புகாரிலுள்ள விவரம் எனக்கு தெரியாது, கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போகும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் வாகனத்தில் செல்லும்போது திடீரென்று மயக்கம்போட்டு கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரிதான். ரூ.70,000/- ஐ யார் எடுத்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான், கிடைக்கவில்லை. சந்தேகத்தின்பேரில் தான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகளை முதன்முதலில் நீதிமன்றத்தில் தான் பார்த்தேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எனக்கும் எந்தவித முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதால் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகள் பணத்தை

எடுக்கவில்லை என்றால் நான் பார்க்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி -** இந்த வழக்கு சம்மந்தமாக 07.11.2024 அன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் ரூ.70,000/- பணத்தை எதிரிகள் டேவிட் மற்றும் பிரபு ஆகியோர் கத்தியை காண்பித்து மிரட்டி என்னிடமிருந்து பிடிங்கி சென்றதாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். பிரபாகரன் பைப்பால் எனது வலது கால் முட்டியில் அடித்துவிட்டதாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். எனது மகன் மணிகண்டன் புகார் எழுதி நான் ரோசனை காவல் நிலையத்தில் கொடுத்ததாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான், எனது மகன் தான் புகார் எழுதிகொடுத்தார். யார் மீது புகார் கொடுத்தேன் என்றால் கொள்ளாரை சேர்ந்த டேவிட் மற்றும் ஒருநபர் மீது புகார் கொடுத்தேன். ரூ.70,000/- பணம் கிடைத்துவிட்டதா என்றால் இல்லை. ரூ.70,000/- பணம் எப்படி எனக்கு வந்தது, எங்கிருந்து எடுத்துச்சென்றேன் என்றால் நான் விவசாயம் செய்து பூசணிக்காய் விற்றப்பணம். சாட்சியத்தில் எதிரிகள் அடித்ததாக சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் போலிசார் சொல்லி சொன்னேன். பொய் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இல்லை, நடந்ததை தான் சொல்கிறேன்.

2. சாட்சியம் அளிக்க என்னை யாராவது மிரட்டினார்களா என்றால் இல்லை. எதிரிகள் டேவிட் மற்றும் பிரபு ஆகியோர்கள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை, நான் காட்டுசிவிறி எதிரி டேவிட் கொள்ளாரை சேர்ந்தவர், பிரபு எந்த ஊரை சேர்ந்தவர் என்று தெரியாது. பாண்டிச்சேரியை சேர்ந்த மோகன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு காலில் அடிப்பட்டதற்கு எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் ஒருவாரம் இருந்தேன். எனக்கு காலில் என்ன சிகிச்சை செய்தார்கள் என்றால் 7

தையல்கள் போட்டார்கள். நீதிமன்றத்தில் முதல் விசாரணை சொல்லிவிட்டு தற்போது எதரிக ளுக்கு பயந்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.